செ.வெ.எண்.581 நாள்-9.7.2010

## செய்தி வெளியீடு– 9.7.2010

## தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்ட பிரச்சினை குறித்து இந்திய வெளிவிவகாரத்துறை இலங்கை அரசுடன் பேசி உரிய நடவடிக்கை எடுக்கும்

### முதலமைச்சர் கலைஞர் எழுதிய கடிதத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு.ப.சிதம்பரம் பதில்

இலங்கை கடற்படையினரால் அப்பாவித் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி ஒருவர் படுகொலை செய்யப்பட்டது குறித்து கண்டனம் தெரிவித்து இத்தகைய சம்பவங்களை மத்திய அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 8.7.2010 அன்று அவசர கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். அக்கடிதத்தின் நகல் மத்திய உள்துறை அமைச்சர் திரு.ப.சிதம்பரம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

அக்கடிதம் கிடைத்ததும், அவர் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு 9.7.2010 தேதியிட்டு எழுதியுள்ள கடிதத்தில், தங்கள் கடிதம் தொடர்பாக பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. சிவசங்கர் மேனன் ஆகியோரிடம் எடுத்துரைத்து, விரிவாக விவாதித்திருப்பதாகவும், இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சகம் இலங்கை அரசுடன் பேசி இப்பிரச்சினை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

* * *

044-2567144.

गृह मंत्री
भारत
नई दिल्ली - 110001
HOME MINISTER
INDIA
NEW DELHI-110001

July 9, 2010

அன்புள்ள முதலமைச்சர் திரு கலைஞர் அவர்களுக்கு

வணக்கம்.

I have received your letter of July 8, 2010. I have also discussed the matter, briefly, with the Prime Minister as well as the National Security Adviser Shri Shivshankar Menon.

I understand that Ministry of External Affairs will take up the matter with the Government of Sri Lanka.

With kind regards,

Yours sincerely,

(P Chidambaram)

Dr. Kalaignar M Karunanidhi
Chief Minister
Government of Tamil Nadu
Secretariat
Chennai 600 009
Tamil Nadu